# குழந்தைகளுக்கான ஒத்த ஒலிப் பாடல்கள் (சாலஅநள) மற்றும் விரல் விளையாட்டுகள்

திறவுங்கள், மூடுங்கள்,
திறவுங்கள், மூடுங்கள்,
கையைக் கொஞ்சம் தட்டுங்கள்.
திறவுங்கள், மூடுங்கள்
திறவுங்கள், மூடுங்கள்
கையை மடியில் வையுங்கள்.

ஊருகிறது, ஊருகிறது,
ஊர்ந்து நாடிக்குப் போகிறது.
வாயை நன்றாய்த் திறவுங்கள்,
விரலை மட்டும் விடவேண்டாம்.



(குழந்தை தனது கையால் இந்த அசைவுகளைச் செய்வதற்கு உதவுங்கள். உங்கள் கைவிரல்கள் குழந்தையின் வயிற்றின் மேல் ஊர்ந்து அதன் நாடிக்குச் செல்லட்டும்.)

சுற்றிச் சுற்றி வட்டமாய்,
தோட்டத்தில் போகுது
கன்றுக்குட்டி.
ஒரு அடி, இரண்டு அடி,
கிச்சு கிச்சு இங்கேயும்தான்!

(உங்கள் குழந்தையின் விரிந்த கையில் வட்டங்கள் இட்டபின் உங்கள் விரல்களை அதன் கையின் மேற்புறமாக நடக்கவிட்டு குழந்தையின் நாடிக்குக் கீழே அல்லது கக்கத்தின் - யசஅிவை - உள்ளே கொண்டு சென்று அதற்குக் கூச்சம் ஊட்டுங்கள்)




# ஏன் இந்த விளையாட்டு?

விளையாடுதல் பிள்ளைகளுக்கு ஏதோ ஒன்றைக் கற்று அறிந்து கொள்ள உதவும் ஓர் அனுபவமாகவே இருக்கிறது. விளையாட்டு ஒவ்வொரு பிள்ளையின் விருத்திக்கும் மிகவும் அத்தியாவசியமான உலகளாவிய முறையில் நடைபெறும் ஒரு செயல்முறை ஆகும். விளையாட்டு என்பது ஒரு பிள்ளை தான் வாழுகின்ற, வளருகின்ற உலகினைத் ஆராய்ந்து அறிவதற்கு உதவியாக இருக்கிறது.

விளையாட்டுக்காக ஏற்படுத்தப்படும் திட்டங்கள் பாதுகாப்பான ஊக்கமளிக்கின்ற ஒரு சூழலில் வயதுக்கு வந்த பெரியவர்களும் பிள்ளைகளும் ஒன்று சேர்ந்து விளையாடக்கூடிய ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுக்கின்றன. ஒன்றாக இதில் ஈடுபடும்பொழுது பெரியவர்களும் பிள்ளைகளும் ஒரு பகுதியினரின் செயல்முறைகளில் மற்றப்பகுதியினர் ஆர்வம் கொள்ள ஆரம்பிப்பதுடன் இருபகுதியினரும் தொடர்பாடல் செய்யும் முறையையும் கற்றுக் கொள்கின்றனர். பொருட்களைப் பகிர்ந்து கொள்ளும் பழக்கம் மற்றும் வளர்ச்சி என்பவற்றை விளையாட்டு பேணி வளர்க்கிறது.

பிள்ளைகள் விளையாட்டில் தமது அனுபவத்தையும் கற்று அறிவதையும் சிறப்பாக அமையும்படி செய்வதற்குப் பயன்படுத்தும் அடிப்படைக் கருவிகளாகப் பொம்மைகள் (toys) அமைகின்றன. விளையாடுவதற்கு “மிகச்சரியான” ஒரு பொம்மைப் பொருள் என்று எதுவும் இருப்பதில்லை. பிள்ளைகளுக்கு அவர்களின் விருத்தி நிலை, ஆர்வங்கள் மற்றும் செயல் திறமைகள் என்பவற்றுக்குப் பொருந்துகின்ற முறையில் பல்வேறு வகையான பொம்மைகள் தேவைப்படுகின்றன. மழைநாட்களில் பயன்படுத்தும் பொம்மைகள், நண்பர்களுடன் சேர்ந்து சுறுசுறுப்பாக வெளிப்புறத்தில் விளையாடுவதற்கான பொம்மைகள், சுகவீனமுறும் நாட்களிலும் விடுமுறைநாட்களிலும் விளையாட உதவும் பொம்மைகள் மற்றும் பகிர்ந்து கொள்ளல், கூட்டுமுயற்சி என்பவற்றை ஊக்குவிக்கும் பொம்மைகள் என்று பலவகைப் பொம்மைகள் அவர்களுக்குத் தேவைப்படுகின்றன. உங்கள் பிள்ளைக்கு என்று பொம்மைகளை நீங்கள் தெரிவு செய்யும் பொழுது உங்கள் பிள்ளையின் தனித்துவமான தேவைகளையும் ஆர்வங்களையும் மனதில் எண்ணிக்கொள்ளுங்கள்.

“ஏன் இந்த விளையாட்டு?” என்று ஒரு தொடர்முறையில் வெளியிடப்பட்டுள்ள பிரசுரங்கள் பின்வரும் வயதுப் பிரிவுகளில் உள்ள பிள்ளைகளுக்குப் பொருத்தமான விளையாட்டுச் செயல்முறைகளை பரிந்துரைக்கின்றன.

| | |
|---|---|
| 0-6 மாதங்கள் | 2-3 வருடங்கள் |
| 6-12 மாதங்கள் | 3-4 வருடங்கள் |
| 1-2 வருடங்கள் | 4-5 வருடங்கள் |

இத்தகவல் பிரசுரங்களை ஒரு தொகுதியாக வாங்குவதற்கும் மற்றும் பிற வெளியீடுகளுக்கும் உரிய விலை விபரங்களை பெறுவதற்கு நாடுங்கள்:


FRP CANADA

707 - 331 rue Cooper Street, Ottawa, ON K2P 0G5
(613) 237-7667
1-866-637-7226
1-866-6-FRPCAN
(613) 237-8515
info@frp.ca
www.frp.ca
www.welcomehere.ca
www.bienvenuechezvous.ca


Tamil/Tamoul

# ஏன் இந்த விளையாட்டு ?

0-6 மாதங்கள

FRP CANADA

# உங்கள் பிள்ளை தன்னைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றி அறிந்து கொள்ள நீங்கள் உதவ உங்களுக்கான சில தகவல் துணுக்குகள்

## விளையாட்டு என்பது...

- கண்டுபிடித்தல்
- துருவி ஆராய்தல்
- சேர்ந்து பழகுதல், பெரும்பாலும் பெரியவர்களுடன்
- அசைதல்
- பிரச்சினை தீர்த்தல்
- செய்து பயிலுதல்



உங்கள் பிள்ளையின் விருத்தி நிலையை மனதில் கொண்டு பொம்மைப் பொருட்களைக் கவனமாகத் தெரிவு செய்யுங்கள்.

உங்கள் குழந்தை சத்தம் ஒன்று கேட்கையில் தன் தலையைத் திருப்புவதற்கு ஆரம்பிக்கும் பொழுது ஒரு சங்கீதம் உண்டாக்கும் பெட்டிப் பொம்மையை சாவி கொடுத்து அக்குழந்தைக்குச் சமீபமாக நிலத்தில் வைத்துவிடுங்கள்.



உங்கள் குழந்தை பொருட்களைக் கையால் பிடிப்பதற்கு ஆரம்பிக்கையில் அதற்கு மெதுமையான பந்துகள், பிளாஸ்திக்கு வளையங்கள், பற்றுவதற்கான மற்றும் பிடியுடன் கூடிய பொம்மைகளை கொடுங்கள்.



உங்கள் குழந்தை பொருட்களை அடிப்பதற்கும் குலுக்குவதற்கும் ஆரம்பிக்கையில் அதற்கு சத்தம் போடும் கிலுகிலுப்பை மற்றும் ஆட்டுகின்ற விளையாட்டுப் பொருட்களை கொடுங்கள்.



உங்கள் குழந்தை தனது தலையை நிமிர்த்தி உயர்த்தி வைத்திருக்க அறிந்து கொண்டதும் அதனை ஒரு நிலைக்கண்ணாடி முன்பாகக் குப்புறப் படுக்க வைத்து அதற்குத் தெரிகின்றவற்றைப் பற்றி குழந்தையுடன் சேர்ந்து கதையுங்கள்.

உங்கள் குழந்தை முன்புறமாக எட்டிப் பொருட்களைப் பிடிக்க ஆரம்பிக்கையில் ஒரு மென்மையான காற்றூதிய பந்தினை குழந்தையை நோக்கி உருட்டிவிடுங்கள்.



உங்கள் குழந்தைக்குரிய தொட்டிலின் மேற்புறத்தில் பிரகாசமான நிறம் கொண்ட சங்கீத ஒலி எழுப்பும் பொம்மைப் பொருள் அல்லது ஆடும் விளையாட்டுக் கருவியை தொங்க விடுங்கள். மாறிக் கொண்டிருக்கும் காட்சியும் ஒலியும் குழந்தையின் ஆர்வத்தைக் கவரக்கூடியனவாக இருக்கும்.



உங்கள் குழந்தை தன் வாய்க்குள் திணிக்கக் கூடிய, குழந்தைக்குப் பாதுகாப்பான பொருட்களை அதற்குக் கொடுங்கள். குழந்தைகள் தமது உலகத்தை இவ்வாறுதான் துருவி ஆராய்கின்றன.



உங்கள் குழந்தைக்கு மெதுமையான துணியை அல்லது எளிமையான படங்கள் உடைய பிளாஸ்டிக் பொருளால் ஆன புத்தகங்களை கொடுங்கள். குழந்தை பொருட்களின் தொடுகை உணர்வு இயல்பினை (வநஒவரசந) இவ்வாறு கண்டு அறிவதில் மகிழ்ச்சியடையும். இதற்குப் பெரும்பாலும் தன் வாயை அது உபயோகிக்கிறது!



உங்கள் குழந்தையை மனிதரின் முகங்கள் கவரக்கூடியனவாக உள்ளன. அவரது மலசலத் தூய்மை அணியை (னயைிநச) நீங்கள் மாற்றப் பயன்படுத்தும் இடத்துக்குச் சமீபமாகச் சிரிக்கின்ற ஒரு முகத்தின் படத்தை வைத்துவிடுங்கள்



இந்தக் கட்டத்தில் உங்கள் குழந்தையின் மிகச்சிறந்த பொம்மைப் பொருளாக <u>நீங்கள்</u> இருப்பதை உணருவீர்கள்!